அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை/ All Rights reserved

வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்

Provincial Department of Education - NWP

GIT | T | I

# இரண்டாம் தவணை பரீட்சை – தரம் 12 – 2018

# Second Term Test - Grade 12- 2018

சுட்டெண் : ........................

பொதுத் தகவல் தொழிநுட்பவியல் I

General Information Technology I

காலம் : 1 மணி

- எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க.
- சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

1. பின்வருவனற்றில் எது /எவை கணணி முறைமை பற்றிய உண்மையான கூற்று?

   A - செயலியினுள் அமைந்துள்ள பதுக்கு நினைவகமானது (cache memory) மின் இணைப்பு துண்டிக்கும் வரை தரவுகளை தேக்கி வைத்துக் கொள்ளும்.

   B - அடிப்படை உள்ளீட்டு, வருவிளைவு முறைமையானது (BIOS) கணணியின் ஆரம்பத் தொழிற்பாட்டை மேற்கொள்ளும் போது Master Boot Record (MBR) னை வாசிக்கும்.

   C - துணை நினைவகமான வன்வட்டில் தரவுகள் மின் இணைப்பு துண்டிக்கப்பட்ட பின்பும் அழியாது காணப்படும்

   (1) A, B மட்டும் (2) A, C மட்டும் (3) B, C மட்டும் (4) A ,B, C எல்லாம்

2. பின்வருவனவற்றில் எது மையமுறைவழி அலகினுள் காணப்படும்?

   (1) RAM (2) CU (3) ROM (4) Cache L3

3. பின்வரும் கூற்றுக்கள் ATM உபகரணம் பற்றியவை ஆகும். அவற்றில் எது தகவலை பிரதிநிதித்துவப்படுத்துகிறது?

   (1) ATM உபகரணத்திலிருந்து பெறப்படும் சிட்டை (2) ATM அட்டை

   (3) ATM அட்டையின் இரகசிய இலக்கம் (4) கணக்கு மீதியை சரிபார்த்தல்

4. பல்லூடகஎறிவை, காட்சித்திரை அல்லது நவீன தொலைக்காட்சி என்பவற்றை கணிணியுடன் இணைப்பதற்கு பயன்படுத்தப்படும இடைமுகம் பின்வருவனவற்றில் எது?

   (1) தாய்ப்பலகை (Mother Board) (2) சில்லுத் தொகுதி (chipset)

   (3) துறைகள் (ports) (4) செருகுவாய் (slots)

5. 2 GB கொள்ளவுடைய நினைவக அட்டையில் 700 MB உடைய கானொளிக் கோப்புகள்(Video Files) அண்ணளவாக எத்தனை சேமிக்கலாம்?

   (1) 2 (2) 2995 (3) 299 (4) 29

6. $76_{10}$ இற்கு சமவலுவான இரும எண் யாது?

   (1) $1011110_2$ (2) $1010100_2$ (3) $1010111_2$ (4) $1001100_2$

7. பின்வருவனவற்றுள் $10011101_2$ இங்கு சமவலுவான பெறுமானம் யாது?

   (1) 157 (2) 913 (3) 532 (4) 171


8. 'Byte' என்ற சொல்லை Unicode இனால் பிரதிநித்துவப்படுத்தும் போது அச்சொல் கொள்ளும் நினைவக அளவு யாது?

   (1) 6 byte (2) 8 byte (3) 16 byte (4) 64 byte

9. பின்வருவனவற்றில் 16 பிற்றுகள் பயன்படுத்தப்படும் குறிமுறையாக்கல் முறை யாது?

   (1) ASCII (2) Unicode (3) BCD (4) EBCDIC

10. பின்வரும் தர்க்கப்படலையின் வருவிளைவு F யை கருதுக. Q,R,S,T என்பவற்றின் பெறுமானங்களை மேலிருந்து கீழாக குறிப்பது யாது?




| A | B | C | F |
|---|---|---|---|
| 0 | 0 | 0 | **1** |
| 0 | 0 | 1 | **0** |
| 0 | 1 | 0 | **1** |
| 0 | 1 | 1 | **1** |
| 1 | 0 | 0 | --Q-- |
| 1 | 0 | 1 | --R-- |
| 1 | 1 | 0 | --S-- |
| 1 | 1 | 1 | --T-- |

(1) 1,1,0,1 (2) 1,1,0,0 (3) 1,0,0,1 (4) 1,0,1,1

11. பின்வருவவற்றுள் எது /எவை கணிணி நினைவகம் மற்றும் தேக்க சாதனங்கள் பற்றி உண்மையான கூற்று /கூற்றுக்கள்?

A - பதியி நினைவகமானது அதி கூடிய வேகம் மற்றும் மிகக் குறைந்த கொள்ளவு உடையது.

B - இருவட்டுக்ககளில் தேக்க முறையாக ஒளியியல் தொழில் நுட்பம் பயன்படுத்தப்படுகிறது.


C - தற்போக்கு பெறுவழி நினைவகமானது (RAM) அழிதகு நினைவகமாகும்.





(1) A மட்டும் (2) A ,C மட்டும் (3) A ,B மட்டும் (4) A,B,C ஆகிய எல்லாம்

12. பாதுகாப்பு முறைமையொன்று உள்ள இரண்டு கதவுகளை கொண்ட கார் ஒன்றின் ஏதாவது ஒரு கதவு திறக்கப்படின் அலாரம் ஒலிக்கும் (இங்கு கதவு மூடப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் உள்ளீடு 1 ஆகும்.) மேற்குறிப்பிட்ட சூழ்நிலைக்கு பொருத்தமான தர்க்கப்படலை யாது?

(1) NOT (2) AND (3) OR (4) NAND

13. பின்வருவனவற்றில் தரப்பட்ட இலத்திரனியல் சுற்றை பிரதிநிதித்துவப்படுத்தக கூடிய தர்க்கப்படலை யாது?



(1)  (2)  (3)  (4) 

14. இடைமுகம் அடிப்படையில் வகைப்படுத்தப்படும் இரண்டு பனிச்செயல் முறைமைகள் யாவை?

(1) திறந்த (open Source) மற்றும் உரிமம் பெற்றது. (Licensed)

(2) (Command Line) கட்டளைக்கோடு மற்றும் (Graphical user)வரைவியல் பயினர்

(3) (Single user) தனிப்பயனர் மற்றும் (Multi user) பல்பயனர்

(4) (Real Time) நிகழ் நேரம் மற்றும் (Batch processing) தொகுதி முறைவழியாக்கம்

15. பின்வருவனவற்றில் சொல்முறைவழிப்படுத்தல் மென்பொருளில் (File extension) பயன்படுத்தப்படும் கோப்பு நீட்சி யாது?

(1) .docx (2) .xlsx (3) .accdb (4) .swf

16. பின்வருவனவற்றில் பணிச் செயல் முறைமை ஒன்றின் தொழிற்பாடு அல்லாதது?

(1) நினைவக முகாமை (2) சாதன முகாமை (3) முறைவழி முகாமை (4) மென்பொருள் முகாமை

17. கணணியின் திகதி, நேரம், மற்றும் பிராந்திய மொழி என்பனவற்றை மாற்றவதற்கு கட்டுப்பாட்டு பலகம் (Control panel) இல் உள்ள......................................... பயன்படுத்தப்படும்.


(1) Language and Region (2) Programs and Features

(3) Personalization (4) Keyboard

18. பின்வருவனவற்றுள் எது இலவச மற்றும் திறந்த மூல பனிச்செயல் முறைமையாக (Free & Open source) கருதலாம்?

(1) Windows 8 (2) Apple MAC OS (3) Linux (4) Windows server

19. பின்வருவனவற்றுள் எது சொல்முறைவழிப்படுத்தல் மென்பொருள் ஒன்றில் வரிகளுக்கிடையிலான இடைவெளி கூட்ட /குறைக்க பயன்படுத்தப்படும்?

(1)  (2)  (3)  (4) 



20. பின்வருவனவற்றில் எதை தெரிவு செய்வதன் மூலம் சொல்முறை வழிப்பதற்றல் ம்ெனபொருளில் உள்ள ஒரு கடிதத்தை பல முகவரிகளுக்கு அனுப்ப முடியும்?

(1) Merge cells (2) Mail merge (3) Quick Parts (4) Thesaurus

21. பின்வருவனவற்றுள் எந்த குறுக்குசாவி(Short key) சொல்முறைவழிப்படுத்தல் மென்பொருளில் ஒரு சொலுக்கு பதிலாக வேறொரு சொல்லை பயன்படுத்துவதற்கு (find and replace) பயன்படுத்தம்படும்?

(1) Ctrl + N (2) Ctrl + R (3) Ctrl +H (4) Ctrl + E

22. பின்வருவனவற்றில் எந்த கருவி ஆவணம் ஒன்றின் உள்தள்ளலை அதிகரிக்க (Increase Indentation) பயன்படுத்தப்படும்?

(1)  (2)  (3)  (4) 

- **23 - 24 வினாக்களுக்கு விடையளிக்க பின்வரும் விரிதாள் ஒன்றின் பகுதியை பயன்படுத்துக.**

23. கலம் C2 இல் உள்ளிட வேண்டிய சார்பு "FUNCTION" யாது?

| | A | B | C |
|---|---|---|---|
| 1 | Name | Average | Place |
| 2 | Nimsara | 70 | 4 |
| 3 | Gihan | 55 | 5 |
| 4 | Shanika | 78 | 3 |
| 5 | Gayan | 90 | 1 |
| 6 | Nadunika | 85 | 2 |

=FUNCTION1(B2,B$2:B$6)

(1) SUM (2) RANK (3) PLACE (4) AVERAGE

24. கலம் C3 இல் உள்ள சார்பை கலம் C6 இற்கு பிரதி செய்யப்படின் C6 இல் சார்பு காட்சிபடுத்தப்படும் விதம் யாது?

(1) = FUNCTION1(B6,B$6:B$2) (2) =FUNCTION1(B2,B$6:B$2)

(3) =FUNCTION1(B6,B$6:B$10) (4) =FUNCTION1(B6,B$2:B$6)

25. ....................................... குறுக்கு சாவியானது நிலைகாட்டியை (A1) கலத்திற்கு எடுத்து செல்ல பயன்படுத்தப்படும் இடைவெளிக்கு பொருத்தமான குறுக்கு சாவி யாது?

(1) Ctrl + Home (2) Ctrl + ↑ (3) Ctrl + ↓ (4) Ctrl + pg up

26. =4^2/(8-2^2)*3 என்ற சூத்திரத்தின் கருவிளைவு யாது?

(1) 12 (2) -10 (3) 1.333 (4) 62

27. பின்வரும் சார்பகளை கருதுக.

A - =SUM(A2,B4:B7) B - =SUM(A2,B4,B7) C - =SUM(B4:B7+A2)

மேலுள்ளவற்றள் எது / எவை செல்லுபடியாகும் சார்பு /கள்?

(1) A- மட்டும் (2) B - மட்டும் (3) A, B மட்டும் (4) A,B,C ஆகிய எல்லாம்

28. பின்வருவனவற்றில் எந்த வரைபு வகை 2016, 2017 ஆண்டுகளில் மோட்டார் சைக்கிள், கார், பஸ் மற்றும் ஏனைய வாகனங்களின் விபத்து விபரங்களை ஒப்பீட்டு பார்ப்பதற்கு பொருத்தமற்றது?

(1) நிரல் வரைபு (column chart) (2) சலாமை வரைபு (Bar chart)

(3) கோட்டு வரைபடம் (Line chart) (4) வட்ட வரைபு (Pie chart)

29. பின்வரும் முன்வைப்பு மென்பொருள் (Presentation software) பற்றிய கூற்றுக்களை கருதுக.

A- முன்வைப்பு மென்பொருளின் படவில்லைக்கு படிமங்களை (images) உள்ளிட முடியும்.

B- முன்வைப்பு மென்பொருளின் படவில்லைக்கு காளொளிகளை(videos) உள்ளிட முடியும்.

C- முன்வைப்பு மென்பொருளின் படவில்லைக்கு குரல்(voice) ஒன்றை உள்ளிட முடியும்.

மேலுள்ள கூற்றக்களில் எது/ எவை சரியானது /சரியானவை?

(1) A மட்டும் (2) A, B மட்டும் (3) B மட்டும் (4) B, C மட்டும்

- **வினாக்கள் 30 ,31 மற்றும் 32 என்பவற்றிற்கு விடையளிக்க பின்வரும் தரவுத்தளத்தை பயன்படுத்துக. இவ்வட்டவணையானது விற்பனை நிலையமொன்றின் கணிணி பாகங்களின் விபரங்களைக் கொண்டுள்ளது.**

| **Product_Id** | **Product_Name** | **Quantity** | **Unit_price** | **Purchase_Date** |
|---|---|---|---|---|
| PC001 | Monitor-17” | 05 | Rs.7000.00 | 2017/3/12 |
| PC002 | Mother Board | 12 | Rs.5500.00 | 2017/3/12 |
| PC003 | DVD-ROM | 10 | Rs.3000.00 | 2017/4/12 |
| LT001 | Laptop Battery | 10 | Rs.4500.00 | 2017/8/20 |
| LT002 | Laptop RAM -2GB | 04 | Rs.1500.00 | 2017/8/20 |

30. 'Purchase_Date' மற்றும் Unit_price என்பனவற்றிற்கு பொருத்தமான தரவு வகைகள் யாவை?
(1) திகதி /நேரம் (Date/Time) மற்றும் எண் (Number)
(2) நாணயம் (currency) மற்றும் திகதி /நேரம் (Date/Time)
(3) திகதி /நேரம் (Date/Time) மற்றும் நாணயம் (currency)
(4) பாடம் (Text) மற்றும் நாணயம் (currency)

31. அட்டவணையில் காணப்படும் பதிவுகளின் எண்ணிக்கை யாது?
(1) 4 (2) 5 (3) 6 (4) 25

32. இவ்வட்டவணியல் முதன்மைசாவிக்கு(primary key) பொருத்தமான புலம் (fields) யாது?
(1) Product _Id (2) Product _Name (3) Unit_price (4) Quantity

33. பின்வரும் (Vector graphics) நெறிய வரைபுகள் சம்பந்தமான கூற்றுக்களை கருதுக.
A- நெறிய வரைபுகளை சேமிக்கும் போது பரவல் வரைபுகளை விட குறைந்த இடத்தை பிடிக்கும்.
B- நெறிய வரைபுகளின் கொள்ளவு மாற்றத்தின் போது அதன் தரம் மாறாது
C- உயர் மட்ட வரைபு உருவாக்கங்களின் போது நெறிய வரைபுகள் பயன்படுத்தப்படும்
மேலுள்ளவற்றில் சரியான கூற்ற /கூற்றக்கள் யாவை?
(1) A- மட்டும் (2) A, B மட்டும் (3) B, C மட்டும் (4) A,B, C ஆகிய எல்லாம்

34. பின்வரும் Gimp வரைவியல் மென்பொருள் கருவிகளுள் எது குறித்த நிறம் உள்ள பகுதி அல்லது பிரதேசத்தை தெரிவு செய்ய பயன்படும்?
(1)  (2)  (3)  (4) 

35. ஒரு வரைபின் தரத்தை தீர்மானிக்கும் பிரிதிறனை குறிக்க பயன்படுத்தப்படும் அளவை அலகு யாது?
(1) dpp - dots per pixel (2) bpp - bits per pixel (3) ppp - pixels per picture (4) ppi - pixels per inch

36. பின்வரும் கோப்பு நீட்சிகளில் வரைபு நெருக்கத்தின் போது பாதிப்படையாத 'lossy less' கோப்பு நீட்சி யாது?
(1) JPEG (2) TIFF (3) BMP (4) GIF

37. பின்வருவனவற்றுள் இலவச மற்றும் திறந்த மூல பரவல் வரைபு (raster graph) மென்பொருள் யாது?
(1) Adobe photo shop (2) Adobe Illustrator (3) GIMP (4) Corel draw

38. பின்வரும் கோப்பு நீட்சிகளுள்(file extensions) ஒலி கோப்பு நீட்சி (Audio) யாது?
(1) .wmv (2) .Mp3 (3) .swf (4) .mp4

39. பின்வரும் எக்கருவி (Audacity) ஒலித்தொகுப்பு மென்பொருளில் தெரிவு செய்த பகுதியை தவிர ஏனைய பகுதிகளை வெட்ட பயன்படும்.
(1)  (2)  (3)  (4) 

40. கானொளிக் கோப்பு வடிவமைத்தலின் போது கானொளிச் சட்டகம் (video frame) ஒன்றின் காட்சி நேரத்தை அமைக்க பயன்படுத்தப்படும் கட்டளை யாது?
(1) Animations → Duration ஆகும். (2) Home → Duration ஆகும்.
(3) Home → Add duration ஆகும். (4) Format → Duration ஆகும்.